

சென்னை மாவட்ட வளர்ச்சி குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடனான மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம், குழுவின் தலைவர்/மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தலைமையில் நேற்று (02.08.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குழுவின் துணைத் தலைவர் / வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், குழுவின் உறுப்பினர் செயலர்/சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

# சென்னை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

## தயாநிதி மாறன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.3

சென்னை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் குழுவின் தலைவர்/மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் தலைமையில் நேற்று (02.08.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மாவட்ட சமூக நல அலுவலகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இந்தியன் ரயில்வே, தேசிய சமூக இணைத் திட்டம், டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை (பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம்), பி.எஸ்.என்.எல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒன்றிய அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், மேற்கொள்ளப் பட உள்ள திட்டங்கள் குறித்தும் குழுவின் தலைவர்/மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஆய்வு செய்து, திட்டத்தின் பலன்கள் மக்களுக்கு விரைந்து சென்றடையும் வகையில் செயல்படுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, குழுவின் துணைத் தலைவர்/வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஜெ.கருணாநிதி, ஜோசப் சாமுவேல், ஆ. வெற்றி அழகன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, கே.பி.சங்கர், ஜே.ஜே.எபினேசர், எஸ். அரவிந்த் ரமேஷ், தாயகம் கவி,

ஆர்.டி.சேகர், ஏ.எம். வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், குழுவின் உறுப்பினர் செயலர்/ சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மரு.கீ.சு.சமீரன், காவல் துணை ஆணையர் (தலைமையகம்) டி.என். ஹரிகிரண் பிரசாத், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு. கீதா, குழு உறுப்பினர்கள் அழகிரி சதாசிவம், மரு. யாழினி, செல்வி.நிவேதா ஜெஸிகா, திருமதி.நவநீதம் இளமந்தா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மின் வாகனப் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் – ரூ. 1 லட்சம் பரிசுடன்

# மின் இயக்க வாகனத்தின் வடிவமைப்பு - காட்சிப் படம் உருவாக்கும் போட்டி!

## தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் அழைப்பு!

சென்னை, ஆக.3-

பொதுமக்கள், மாணவர்கள், சுய தொழிலாளர்கள் மற்றும் படைப்பாற்றல் கொண்ட நிறுவனங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

தமிழ்நாடு தற்போது மின் இயக்க வாகன உற்பத்தி மற்றும் சார்ஜிங் உள்கட்டமைப்பில் முன்னோடி மாநிலமாக இருப்பதன் காரணமாக, மின் இயக்க வாகன புரட்சியின் முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை அதிகரிக்க அரசு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

நல்ல உள்கட்டமைப்போடு மக்களுக்கு மின் இயக்க வாகனங்களின் நன்மைகள் மீது நம்பிக்கையும் அமைய வேண்டும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் (TNGECL), ITDP இந்தியா மற்றும் மெட்ராஸ்டார்ஸ் (Madrasters) நிறுவனத்துடன் இணைந்து, பொதுமக்களில் விழிப்புணர்வை உருவாக்கி, நம்பிக்கையை தூண்டும் வகையில், மின் இயக்க வாகனங்கள் தொடர்பான பிராண்டிங் மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது மின் வாகன பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் (TNGECL) வாயிலாக நிலம் வைத்திருப்பவர்கள் மற்றும் சார்ஜிங் பாய்ண்ட் ஆபரேட்டர்ஸ் (CPOs) இடையே இணைப்பு ஏற்படுத்தி, விரிவான சார்ஜிங் உள்கட்டமைப்பினை உருவாக்கி அனைத்தையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் ஒரு அடையாளத்தினை மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மக்களால் மக்களுக்குரிய ஒரு அடையாளம் உருவாக்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் மின் இயக்க வாகனத்தின் அடையாள வடிவமைப்பு மற்றும் காட்சிப்படம் உருவாக்கும் போட்டியினை அறிவித்துள்ளது. இந்த EV பிராண்டிங் முயற்சியின் மூலமாக பொதுமக்களின் பாதுகாப்பு, பேட்டரி ஆயுள், செலவுகள் மற்றும் சார்ஜிங் அணுகல் குறித்த சந்தேகங்களை எளிதாக தெளிவுபடுத்த இயலும்.

பொதுமக்கள், மாணவர்கள், சுய தொழிலாளர்கள் மற்றும் படைப்பாற்றல் கொண்ட நிறுவனங்களுக்கு இது ஒரு அரிய வாய்ப்பு. வெற்றிபெறும் வடிவமைப்பு தமிழ்நாட்டின் அனைத்து மின் இயக்க வாகன முயற்சிகளுக்குமான அதிகாரப்பூர்வ பிராண்டிங் மற்றும் லோகோவாக தேர்வு செய்யப்படும்.

இந்த போட்டிக்கான பதிவு கட்டணம் இலவசம். இதற்கான அறிவிப்பு ஜீலை 29 ம் தேதி வெளியிடப்பட்டது, இந்த அறிவுப்பு தொடர்பான இணைய வழி வழிகாட்டி ஆகஸ்ட் 4 ம் தேதி வரையிலும், சமர்பிக்கும் கடைசி நாளாக ஆகஸ்ட் 22 ம் தேதி வரையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பேட்டியின் முடிவுகள் செப்டம்பர் 4 ம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக முப்பதாயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக இருபதாயிரம் ரூபாயும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியின் தேர்வுக்குழுவினராக தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர், அனீஷ் சேகர், இ.ஆ.ப., பிராண்டிங் வடிவமைப்பாளர் திருமதி. பவித்ரா, ஐ.டி.டி.பி, (I.T.D.P) இந்தியா வின் மூத்த தகவல் தொடர்பு நிறுவனர் திருமதி. ஜே. வர்ஷா, மெட்ராஸ்டார்ஸ் (Madrasters) அமைப்பின் தலைவர் வினோத்குமார், யூ.ஐ. (U.I.) வடிவமைப்பாளர் திரு. நிர்மல் சீதல் மற்றும் நகரமைப்பு நிபுணர் திருமதி. வித்யா மோகன் குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பிராண்டிங் வாயிலாக, மக்களிடையே மின்சார ஊர்தி பயன்பாடு குறித்த பார்வை, நம்பிக்கை மற்றும் உந்துதல் பிறக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு https://www.tngecl.org/static/greenenergy/evrevolution.html என்ற இணையதள முகவரியில் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் அறிவித்துள்ளது.

### திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட

# ஒண்டிக்குப்பம் சலவை தொழிலாளர்களுக்கு கிரையப் பத்திரம்!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவொற்றியூர், ஆக.3-

திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட ஒண்டி குப்பம் பகுதியில் சலவை தொழிலாளர் குடியிருப்பு உள்ளது. இங்கு வசிப்பவர்களுக்கு 2019-ஆம் ஆண்டு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ஐந்து பிரிவுகளாக 160 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் பயனாளர்கள் பங்கீட்டுத் தொகையினை முழுவதுமாக செலுத்திய பயனாளிகளுக்கு கிரைய பத்திரம் வழங்கும் நிகழ்ச்சி குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் அவர்கள் கலந்து கொண்டு கிரைய பத்திரத்தை வழங்கினார்.

இந்நிகழ்வில் 14வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், 14வது வட்டக் கழக செயலாளர் ஆர்.சந்தர், நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் நக்கீரன், உதவி பொறியாளர் கோபாலகிருஷ்ணன், எஸ்டேட் அலுவலர் குணசேகரன், சமுதாய ஆய்வாளர் ஆனந்தன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பிரகாஷ், எஸ்.செல்வம் டி.மகேந்திரன் ஒண்டிக்குப்பம் அசோக், பிரேம், அருண், மகளிர் அணி ஹேமலதா, மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஊர் தலைவர் மாசிலாமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு துறையின் சார்பில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து நீர்வளம், சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வள்ளிமலை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முகாமை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஊராட்சிஒன்றியகுழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் சுஜாதா கருணாகரன், ஒன்றிய கழக செயலாளர் பொன்னை சி.ரவி, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி கோட்டீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியில் நாளை

# மின்சார கார் தொழிற்சாலையை முதல்வர் திறந்து வைக்கிறார்!

## கழகத்தினர் திரளாகக் கலந்து கொள்ள அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, ஆக.3-

தூத்துக்குடியில் நாளை (ஆகஸ்ட் 4ஆம் தேதி) வின்ஃபாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். இதில் கழகத்தினர் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டுமாய் அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. தலைவர் - சமூக நீதி காவலர் - 50 ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்து முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலனுக்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு மேம்படவும், தமிழ்மொழி மென்மேலும் சிறக்கவும், தமிழ்நாடு வளர்ச்சி பெறவும் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற உன்னத கொள்கையோடு திராவிட மாடல் ஆட்சிபுரிந்து வரும் திராவிட நாயகர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வின்ஃபாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலை திறப்பு விழா மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யும் நிகழ்வு ஆகியவற்றில் கலந்து கொள்ள வருகை தர உள்ளார்.

ஆகஸ்ட் 4ஆம் தேதி திங்கட்கிழமை சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு காலை 9.00 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையம் வந்தடைகிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கடந்து தூத்துக்குடி - மதுரை புறவழிச் சாலை வழியாக சென்று, வின்ஃ;பாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலையை திறந்து வைத்து, அங்கு நடைபெறும் துவக்க விழாவில் பங்கேற்கிறார்.

அதன்பிறகு அங்கிருந்து சாலை மார்க்கமாக FCI குடோன் வழியாக தூத்துக்குடி மாநகருக்குள் வந்து விவிடி சிக்னல், தெற்கு காவல் நிலையம், காமராஜர் கல்லூரியைக் கடந்து தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் உள்ள மாணிக்கம் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யும் நிகழ்வில் கலந்து கொள்கிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வு முடிந்து, அங்கிருந்து புறப்பட்டு காமராஜர் சாலை, பிரையண்ட் நகர் 1வது தெரு, சிதம்பர நகர் மெயின் ரோடு, விவிடி சிக்னல் வழியே விமான நிலையம் சென்று சென்னை திரும்புகிறார்.

இந்நிகழ்வுகளில் கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும், பொதுக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

### ஏ.கே.கருணாகரன் தலைமை! இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - ரபி அகமது பங்கேற்பு!

# செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. (BLA2) (BDA) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்கினார்!

காஞ்சிபுரம், ஆக். 03

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. பாக முகவர்கள் (BLA2) பாக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் (BDA) ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் ரபி அகமது ஆகியோர் பங்கேற்றனர்.

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார்.

இக்கூட்டத்திற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் கி.பூபதி, ஹ.பாஸ்கரன் ச.சரஸ்வதி சந்திரசேகர், த.கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்டப் பிரதிநிதி ரமேஷ், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம்.ஐ.டி எஸ்.விஜய், ஜே.வேணுகோபால், மாநகரப் பிரதிநிதிகள் சி.ஆர். மதுரை வீரன், ம.பற்குணன், ஓ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன், பி.பாலச்சந்தர், வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.நாகராஜ், எம்.சார்லஸ், ஆர். ராதா கிருஷ்ணன், ஜே.வி. சந்திரசேகர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

37 வது வட்டச் செயலாளர் எஸ்.மன்னா ராஜா கண்ணா நன்றியுரை ஆற்றினார்.



கழக சட்டத்துறையின் சார்பில் கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ,DLC, CLC,ULC,TLC,FLC மற்றும் ஒன்றிய, நகர,பேரூர், கழக செயலாளர்கள் பயிற்சி வகுப்பு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் கழக சட்டத் துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. நிர்வாகிகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்தினார்கள். இந்த பயிற்சி வகுப்பில் சட்டமன்ற உறுப்பினர். சபா.ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், சூரியா வெற்றிகொண்டான், சு.ராதாகிருஷ்ணன், ஜெ. பச்சையப்பன், நாகை மு.தினேஷ்குமார், சுவை சுரேஷ், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடக்கத்தில் எம்.கே.அருள்குமார் வரவேற்புரை ஆற்றினார். நெய்வேலி தொகுதி ஒருங்கிணைப்பாளர் (CLC) சிலம்பரசன் நன்றி கூறினார்.